# மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
# பதவி வெற்றிடங்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் பொருத்தமான தகைமை பெற்று பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட நிரந்தரமான பதவியில் உள்ள ஊழியர்களிடம் மட்டும் இருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பங்கள் பொருத்தமான ஆவணங்களுடன் (விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டவாறு) உரிய நிறுவனத்தின் செயலாளர்/பதிவாளர்/முதல்வர்/பணிப்பாளர் ஊடாக மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உதவிப்பதிவாளர்/தாபனக்ககிளை (கல்விசாரா ஆளணி)க்கு 09.11.2026 திகதிக்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பூரணமற்ற விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

## 01. தொழில் நுட்ப உத்தியோகத்தர் (தரம் II) பிரிவு "B" பதவி

தகைமைகள்:

i. இரண்டு (02)தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் 5 திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்திகள். திறமைச்சித்திகள் விஞ்ஞானத்தையும் கணிதத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

அல்லது

ii. மூன்று (03) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் 06 பாடங்களில் சித்திகள் உடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலோ ஒரு உயர் கல்வி நிறுவனத்திலோ 08 வருடங்கள் திருப்திகரமான நிரந்தர சேவையினை கொண்டிருத்தல் வேண்டும். சித்தி பெற்ற பாடங்கள் விஞ்ஞானத்தினையும் கணிதத்தினையும் உள்ளடக்குதல் வேண்டும்.

அல்லது

iii. ஒரு உயர்கல்வி நிறுவனத்திலே ஒரு ஆய்வு கூட உதவியாளராக 15 வருடங்கள் திருப்திகரமான நிரந்தர சேவையினை கொண்டிருத்தல் வேண்டும்.

சம்பள அளவு: U-MT I (III) Rs. 51,095 – 7x540; 10x640 – 60,575 p.m. **

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: ஒரு உளச்சார்பு பரீட்சை மூலமும் ஒரு நேர்முகத் தேர்வு மூலமும்.

தொழில்நுட்பவியலாளர் சேவையில் "பிரிவு B" இன் கீழான நியமனம் 3 வருடங்களுக்கு "பயிலுநர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்" ஆக இருக்கும். பயிற்சிக்காலத்தின் முடிவில், ஆய்வுகூட நுட்பங்கள், பொருள் கோரல், பொருட்பதிவேடுகளை பராமரித்தல், ஆங்கிலத்தில் தட்டச்சு செய்தல் போன்ற திறன்களைப் பெற்றுக்கொண்டவர்கள் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள். "தொழில் நுட்ப உத்தியோகத்தர் தரம் II – பிரிவு B" நிரந்தர பதவிக்கு நியமனம் செய்யப்படும்.

02. <u>பொதுச் சுகாதார பரிசோதகர் தரம் III பதவி</u>

| | | |
|---|---|---|
| தகைமைகள்: | i. | சுகாதாரத் திணைக்களத்தால் நடத்தப்படும் பொது சுகாதார பரிசோதகர்கள் தேர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் பல்கலைக்கழக முறைமையின் பணியாளராக இருத்தல் வேண்டும். |
| சம்பள அளவு: | | U-MT 1 (III) Rs. 51,095-7x540; 10x640 - 60,575 p.m. ** முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும். |
| தெரிவு முறை: | | நேர்முகத் தேர்வு மூலம். |

** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன சுற்றறிக்கைக் கடிதம் இல. 06/2020 இன் நிபந்தனைகளின் படி, பல்கலைக்கழக முறைமையினுள் ஒரு பதவியில் இருந்து இன்னொரு பதவிக்கான நியமனமாகும் சந்தர்ப்பத்தில், அரச தாபனக் கோவையின் அத்தியாயம் VII, பிரிவு 09 இற்கமைய உரிய சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

ஒப்பமிடப்பட்டது
பதிவாளர்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,
22.10.2025